# TNPSC தேர்வுகளுக்கான நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 2016

## தமிழகம்

- **சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர். ரமணன் பணியில் இருந்து 31-3-2016 அன்று ஓய்வு பெற்றார்.** புதிய இயக்குனராக எஸ்.பாலச்சந்திரன் பதவி ஏற்றார்.
- கிரானைட் கற்களை அரசுடமை யாக்கக் கோரும் வழக்கில் சர்ச்சைக் குரிய தீர்ப்பு வழங்கிய **மேலூர் நீதித்துறை நடுவர் (மாஜிஸ்திரேட்) கே.வி.மகேந்திரபூபதி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.**
- தமிழ்நாடு மின் வாரியம் கொள்முதல் செய்யும் **காற்றாலை மின்சாரத்திற்கான கட்டணம், ஒரு யூனிட், 4.16 ரூபாய்** என, விலை நிர்ணயம் செய்து, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில், 7,506 மெகாவாட் திறன் உடைய காற்றாலை மின் நிலையங்கள் உள்ளன.
- **தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகம்** மத்திய அரசின் கப்பல்துறை அமைச்சகம் நிர்ணயித்த 36.80 மில்லியன் டன் சரக்குகளை கடந்து 0.14 சதவீதம் அதிகளவில் சரக்குகள் கையாண்டு சாதனை படைத்துள்ளது
- **நாட்டிலேயே உணவு உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது** என அரசு கூடுதல் தலைமைச் செயலர் கே.சண்முகம் கூறியுள்ளார். கடந்த 50 ஆண்டுகளில் 50 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 110 டன்னாத உயர்ந்துள்ளது. தமிழகத்தில் தரிசு நிலங்களை சிறுதானிய உணவு உற்பத்திக்கானதாக மாற்றும் வகையில் **கனடா நாட்டு உதவியுடன் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.**
- **உயர்கல்வி நிறுவனங்களுக்கான தேசிய அளவிலான முதல் தரவரிசைப்** பட்டியலை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில், பொறியியல் கல்வி நிறுவனங்கள் பட்டியலில் **சென்னை ஐஐடி முதலிடம் பிடித்துள்ளது**.



www.tnpscportal.in

- திருப்பூர் அருகே திருப்பூர் மாவட்டம், பெருந்தொழுவு, கொடுவாய் பகுதிகளில் **12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழைமையான மூத்ததேவி சிற்பங்களை** தொல்லியல் நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

- தமிழக பல்கலைகளில் முதல்முறையாக, 'ஆன்லைன்' தேர்வு முறையை, **சென்னை பல்கலைக்கழகம்** அறிமுகப்படுத்த உள்ளது.

- **முதல் முறையாக மதுரை யாதவா பெண்கள் கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு தபால் தலை வெளியிடப்பட்டது.** ரூ.5 மதிப்புள்ள தபால் தலையில் 'மே.,- 16 அன்று வாக்களியுங்கள்' என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. தபால்தலையை கலெக்டர் கே.வீரராகவராவ் வெளியிட்டார்.

- **உத்தரகண்ட் மாநிலம், ஹரித்வாரில் உள்ள கங்கை நதிக் கரையில் திருவள்ளுவர் சிலையை** அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு மாநில ஆளுநருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
    - உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த மாநிலங்களவை பாஜக உறுப்பினர் தருண் விஜய் அவர்களின் கோரிக்கையை ஏற்று, திருவள்ளுவர் பற்றி வட மாநிலங்களில் உள்ள மத்திய அரசுப் பள்ளிகளில் பயிற்றுவிக்க மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

- **சர்வதேச அளவிலான பண பரிவர்த்தனையில், தமிழக அஞ்சல் துறை முதலிடத்தை பிடித்து, சாதனை பிடித்துள்ளது**.தமிழக அஞ்சல் துறை, 2015ல் சர்வதேச அளவில், அதிகளவில் பண பரிவர்த்தனையில் ஈடுபட்டுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து, தமிழக அஞ்சல்துறைக்கு, 450 கோடி ரூபாயில், பண பரிவர்த்தனை நடந்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில், 1,600 அஞ்சலகங்களில், சர்வதேச பண பரிவர்த்தனை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

- **விருதுநகர் மாவட்டம் ராஜ பாளையம்** அருகே உள்ள தேவ தானத்தில் இருந்து சாஸ்தா கோயிலுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள

www.tnpscportal.in

நெடும்பரம்பு மலை அருகே உள்ள செம்மண் குன்றில் 50-க்கும் மேற்பட்ட **முதுமக்கள் தாழி கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன**.

- **'பிரதம மந்திரி முத்ரா யோஜனா' திட்டம் - நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட கூடுதல் கடன் வழங்கி தமிழகம் சாதனை** : கடந்த 2015 ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் 'பிரதம மந்திரி முத்ரா யோஜனா' என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. இதற்காக 'முத்ரா' வங்கி திறக்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது. இதன்மூலம் சிறு, குறு, நடுத்தர தொழில்களுக்கு வர்த்தக வங்கிகள் வழங்கும் கடன் தொகையை மறு நிதியாக அந்த வங்கிகளுக்கு முத்ரா வங்கி அளிக்கும் என அறிவிக்கப்பட்டது. இதற்காக, முத்ரா வங்கிக்கு மத்திய அரசு ரூ.25 ஆயிரம் கோடியை ஒதுக்கியது. இத்திட்டத்தை கடந்த ஆண்டு ஏப்ரல் 8-ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இதற்காக நாடு முழுவதும் முத்ரா வங்கி அலுவலகங்கள் திறக்கப்பட்டன.
- **உலகிலேயே அதிக வெயில் வாட்டும் இடமாக மதுரை நகர் உள்ளது,' என மதுரை காமராஜ் பல்கலை பல்கலை ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது**.மதுரையில் வெளியாகும் சராசரி கார்பன் டை ஆக்ஸைடின் (சிஓ2) அளவு, உலக சராசரி அளவான 402 பி.பி.எம்.,ஐ விட 65 பி.பி.எம்., அதிகமாக இருப்பதே இதற்கு காரணம்,' என மதுரை காமராஜ் பல்கலை ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் புலம் சார்பில் எடுக்கப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- மதுரை ஆதீன மடத்துக்கு இளைய பட்டமாக **ஸ்ரீ குமரகுரு சுந்தர ஸ்ரீ ஞானதேசிக பரமாச்சார்ய சுவாமிகள்** நியமிக்கப்பட்டார்.
- **மங்கலதேவி கோவில் அல்லது மங்களா தேவி கண்ணகி கோயில்** கேரளத்தின் இடுக்கி மாவட்டத்திலுள்ள குமுளி என்ற ஊரிலிருந்து சுமார் 14 கிலோமீட்டர் தொலைவிலும், தமிழ்நாட்டின் கூடலூர் வனப்பகுதியில் பளியங்குடி எனுமிடத்திலிருந்து சுமார் 6 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இது கடல் மட்ட அளவில் இருந்து சுமார் 5000 மீட்டர் உயரத்தில் உள்ளது. ஆண்டுக்கு சித்திரா பௌர்ணமி தினத்தன்று ஒரு நாள்

மட்டுமே இக்கோயில் பகுதிக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் வரும் சித்திரை முழுநிலவு தினத்தன்று இந்த மங்கலதேவி கண்ணகி கோயிலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பக்தர்கள் சிறப்பு வழிபாடுகள் செய்து வருகின்றனர். கண்ணகி கோவிலில், 1004ம் ஆண்டு, ராஜராஜன் கல்வெட்டு, 1234ம் ஆண்டு, குலசேகர பாண்டியன் கல்வெட்டு உள்ளன.

- சென்னை உயர் நீதிமன்ற மூத்த நீதிபதி வி.ராமசுப்ரமணியன், ஏப்., 27ல், தெலுங்கானா - ஆந்திர மாநில உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார்.
- இந்தியாவில் சிலிண்டர் மானியத்தை விட்டுக் கொடுத்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையிலான பட்டியலில் **தமிழகம் 5வது இடத்தில் உள்ளது** என மத்திய பெட்ரோலியம் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
- **பெங்களூரில் திருக்குறள் மன்ற நூலகத்தை சமூக விரோதிகள் சூறையாடி, அந்த நூலகத்திலிருந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் வீதியில் வீசியெறியப்பட்டன.**பெங்களூரில் தமிழர்கள் அதிக அளவில் வசித்துவரும் அல்சூர் பகுதியில் உள்ள தாமோதர் முதலியார் தெருவில் அமைந்துள்ளது திருக்குறள் மன்றத்தின் தமிழ் நூலகம். 1976-ஆம் ஆண்டு முதல் இங்கு செயல்பட்டு வருகிறது.
- '**தெரிந்த பாரதம் தெரியாத பாத்திரம்**' புத்தகத்தின் ஆசிரியர் - இந்திரா சவுந்தரராஜன்
- **தமிழகத்திலேயே முதல்முறையாக தேர்தலில் போட்டியிட** மதுரை தெற்கு தொகுதியில் இந்து மக்கள் கட்சி சார்பில் வேட்பாளர் **திருநங்கை அனுசியாஸ்ரீ** வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.
- **தமிழகத்தில் வரும் கல்வி ஆண்டு முதல் 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திருக்குறளின் அறத்துப்பால் மற்றும் பொருட்பால் பிரிவுகளில் உள்ள அனைத்து குறட்பாக்களையும்முழுமையாக கற்பிக்க வேண்டும் என உயர்**

**நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது**. தமிழகத்தில் வரும் கல்வி ஆண்டு முதல் திருக்குறளின் 1330 குறட்பாக்களையும் பாடத்திட்டத்தில் சேர்க்க உத்தரவிடக்கோரி ஓய்வு பெற்ற அரசு ஊழியர் எஸ்.ராஜரத்தினம் என்பவர் உயர் நீதிமன்ற கிளையில் மனுத் தாக்கல் செய்தார்.இந்த மனு நீதிபதி ஆர்.மகாதேவன் இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளார்.

- **தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியலை தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி வெளியிட்டுள்ளார்.** இதன்படி,
    - மொத்தம் 5.82. கோடி வாக்காளர்கள்
    - ஆண் வாக்காளர்கள்: 2.88 கோடி
    - பெண் வாக்காளர்கள்: 2.93 கோடி
    - திருநங்கைகள் : 4720
    - அதிகபட்சம் சோழிங்கநல்லூர் : 6.02 லட்சம் வாக்களர்கள்
    - குறைந்தபட்சம் கந்தர்வக்கோட்டை : 1.85 லட்சம் வாக்களர்கள்
    - முதல் முறை வாக்காளர்கள் : 21.05 லட்சம்

## இந்தியா

- **சட்ட மேதை அம்பேத்கரின்** 125- **ஆவது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு**, **அவரது உருவம் பொறித்த** 10 **ரூபாய் நாணயம்** புழக்கத்தில் விடப்படும் என ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ்** (100 **நாள் வேலைத் திட்டம்**) **ஊதிய விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது.** தமிழ்நாட்டில் 183 ரூபாயிலிருந்து 203 ரூபாயாகவும், கேரளாவில் 229 ரூபாயிலிருந்து 240 ரூபாயகவும, கர்நாடகவில் 204

ரூபாயிலிருந்து 224 ரூபாயாகவும், ஆந்திராவில் 180 ரூபாயிலிருந்து 194 ரூபாயாவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- **இந்திய ரயில் போக்குவரத்து வரலாற்றில் முத்திரை பதிக்கும் வகையில், முதல் முறையாக நாட்டிலேயே அதிக வேகத்தில் செல்லும் "கதிமான்' ரயிலின் சேவை வரும் 5ஆம் தேதி தொடங்கப்படுகிறது**.
  - **தில்லி ஹஸ்ரத் நிஜாமுதீன் ரயில் நிலையத்தில் இருந்து ஆக்ரா** நோக்கி புறப்படும் முதல் ரயில் சேவையை, ரயில்வே துறை அமைச்சர் சுரேஷ் பிரபு துவக்கி வைத்தார். மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய கதிமான் ரயில், 184 கி.மீ. தூரத்தை 100-110 நிமிடங்களில் கடக்கும். **இது, சதாப்தி விரைவு ரயிலின் வேகத்தைக் காட்டிலும் மணிக்கு 10-20 கி.மீ. அதிகமாகும்**.
  - இந்த ஒட்டுமொத்த ரயிலும் "இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் கீழ் முழுவதுமாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாகும். இதன் பெட்டிகள் அனைத்தும் **பஞ்சாபில் உள்ள கபூர்தலா ரயில் பெட்டிகள்** கட்டுமானத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டவை. இதில் உள்ள இயற்கை முறையிலான கழிப்பறைகள், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) மூலம் உருவாக்கப்பட்டதாகும். ரயிலின் இதர அமைப்புகள் அனைத்தும் இந்திய நிறுவனங்களாலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன

- **மகாராஷ்டிர மாநிலத்தில் அனைத்துக்கோயில்களிலும் பெண்களும் நுழைந்து பிரார்த்தனை செய்யலாம்** என மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. கோயி லில் நுழைந்து வழிபடுவது பெண் களின் அடிப்படை உரிமை என தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம் அவர் களைத் தடுத்தால் 6 மாதம் சிறை தண்டனை அளிக்கப்படும் என தெரிவித்துள்ளது

- **இந்தியாவிலேயே அதிக வேலைவாய்ப்புகளை வழங்குவதில் கர்நாடகா மாநிலத்திற்கு முதலிடம்; தமிழ்நாட்டிற்கு 3-வது இடம்** : பல்வேறு நிறுவனங்களில் அறிவிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளை ஆராய்ந்து **அசோசெம்** வெளியிட்டுள்ள இந்த பட்டியலில், கர்நாடக மாநிலம் 2.16

www.tnpscportal.in

லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி முதலிடத்திலும், மகராஷ்டிரா (2 லட்சம்) 2-வது இடத்திலும் உள்ளன. தமிழ்நாடு 93 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி 3-வது இடத்தை பிடித்துள்ளது. ஆந்திரா-தெலுங்கானா மற்றும் ஹரியானா மாநிலங்கள் முறையே 4-வது, 5-வது இடத்தை பிடித்தன.

- **சிறு சேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகித குறைப்பு வெள்ளிக்கிழமை (ஏப்ரல் 1) முதல் அமலுக்கு வந்தது.**

**புதிய வட்டி விகிதங்கள்**

- ஏப்ரல் 1 முதல் ஜூன் 30 வரையிலான முதல் காலாண்டுக்கு பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதம் 8.1 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது 8.7 சதவீதம் வட்டி வழங்கப்படுகிறது.
- கிஸான் விகாஸ் பத்திரத்துக்கான வட்டி விகிதம் 8.7 சதவீதத்தில் இருந்து 7.8 சதவீமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- அஞ்சல் நிலையங்களில் சேமிப்புக் கணக்குக்கு வழங்கப்படும் வட்டி 4 சதவீதமாகவே தொடரும். அதே நேரத்தில், 5 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்களுக்கான வட்டி 8.5 சதவீதத்தில் இருந்து 8.1 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- அஞ்சல் நிலையங்களில் 5 ஆண்டுகளுக்கு நிரந்தரமாக முதலீடு செய்யப்பட்டு மாதம்தோறும் வட்டி பெறும் சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி விகிதம் 8.4 சதவீதத்தில் இருந்து 7.8 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- செல்வமகள் சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி 9.2 சதவீதத்தில் இருந்து 8.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. மூத்த குடிமக்களின் 5 ஆண்டு சேமிப்புத் திட்டங்களுக்கு தற்போது 9.3 சதவீத வட்டி வழங்கப்பட்டு வருகிறது. இனி இந்த வட்டி 8.6 சதவீதமாக இருக்கும்.
- அஞ்சலகங்களில் 1, 2, 3, ஆண்டு தொடர் வைப்பு நிதிக்கு (ஆர்டி) இப்போது 8.4 சதவீத வட்டி வழங்கப்படுகிறது. ஏப்ரல் 1 முதல் ஓராண்டு தொடர் வைப்பு நிதிக்கு 7.1 சதவீதமும், 2 ஆண்டு தொடர் வைப்புக்கு 7.2 சதவீதமும், 3 ஆண்டு தொடர் வைப்புக்கு 7.4 சதவீதமும் மட்டுமே வட்டியாக வழங்கப்படும்.

- ➢ 5 ஆண்டு நிரந்தர வைப்பு நிதிக்கான வட்டி 8.5 சதவீதத்தில் இருந்து 7.9 சதவீதமாகக் குறைந்துள்ளது. 5 ஆண்டு தொடர் வைப்புக்கான வட்டி 8.4 சதவீதத்தில் இருந்து 7.4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

- ❖ **இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்** ரூ.31.6 லட்சம் கோடி என மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

- ❖ **வித்யூத் பிரவா மொபைல் அப்ளிகேஸன் (Vidyut PRAVAH)** - மின்சார தேவை, குறைபாடு, விலை ஆகிய விவரங்களை அறிவதற்கான மத்திய அரசின் பிரத்யேக மொபைல் அப்ளிகேஸன் ஆகும். இதனை மத்திய மின்சார மற்றும் நிலக்கரி அமைச்சர் பியூஸ் கோயல் வெளியிட்டுள்ளார்.

- ❖ லாரி மற்றும் வேன்களில் '**கட்டாயம் வேக கட்டுபாட்டு கருவியை** பொருத்தும் சட்டம்' ஏப்ரல்-1 முதல் அமலாகியது.

- ❖ சத்தீஸ்கரில் நக்சல்களின் கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்த தமிழகத்தைச் சார்ந்த **மத்திய ரிசர்வ் போலீஸ் படை (சிஆர்பிஎப்) வீரர் - விஜயராஜ்**

- ❖ **லாகு உத்யோக் சமாச்சார் (LaghuUdyogSamachar)**- மத்திய சிறு மற்றும் குறு தொழில்கள் துறைக்கான பருவ இதழ் (magazine)

- ❖ **மண்ணெண்ணெய் பயன்பாடில்லாத முதல் நகரம்** : சண்டீகர் நகரில் மானிய விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்வது ஏப்ரல் 1 முதல் நிறுத்தப்பட்டது. இதனால், மண்ணெண்ணெய் பயன்பாடில்லாத முதல் நகரமாக சண்டீகர் அறிவிக்கப்பட்டுள்ளது

- ❖ **காதி கிராம தொழில்கள் கமிஷன் மற்றும் ஏர்இந்தியா நிறுவனத்தினிடையே புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.** இதனையடுத்து, ஏர்இந்தியா ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் இனி கதர் சீருடை அணிய உள்ளனர்.

- ❖ **ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் முதல் பெண் முதல்வராக மெஹபூபா முஃப்தி பதவியேற்றுக் கொண்டார்**

- சவுதி அரேபியா நாட்டிற்கு சென்றுள்ள **பிரதமர் நரேந்திர மோடி** அவர்கள் அந்நாட்டு அரசரான **சல்மான் பின் அப்துல் அசீஸ் அல் சவுத்திற்கு**( Salman bin Abdulaziz Al Saud ) தங்கதகட்டால் செய்யப்பட்ட **கேரளாவின் ஜீமா மசூதியின் நினைவு சின்னத்தை பரிசளித்துள்ளார்.**

- **UIDAI** என்பதன் விரிவாக்கம் - Unique Identification Authority of India

- **ஆதார் திட்டத்தின் மைல் கல்லாக, ஏப்ரல் 4, 2016 அன்று வரை 100 கோடி ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.** தற்போது , நாட்டின் மக்கள் தொகையில் 18 வயதிற்கு மேற்பட்டோரில் 93 சதவீதம் பேருக்கு ஆதார் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- **மத்திய சுகாதாரத்துறையின் சார்பில் 04-04-2016 லிருந்து ஒரு வார காலத்திற்கு சுகாதார வாரமாகக் கடைபிடிக்கப்பட்டது.** மேலும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா அவர்கள் **இந்திரா தனுஸ் தடுப்பூசித்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தை** 7-4-2016 அன்று துவக்கி வைத்தார்.

- **இந்தியாவிலேயே முதல்முறையாக ஆதார் ஏ.டி.எம். அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.** இந்த புதிய வசதி மூலம் வாடிக்கையாளர்கள் ஏ.டி.எம். கார்டு இல்லாமலேயே பணத்தை எடுக்க முடியும்.

  - **மகாராஷ்டிராவை சேர்ந்த டி.சி.பி. வங்கி அறிமுகப்படுத்தியிருக்கும்** இந்த புதிய வசதியின் மூலம் பணம் எடுக்க ஆதார் அட்டையில் உள்ள 12 எண்களை ஏ.டி.எம். இயந்திரத்தில் டைப் செய்தால் போதும். பிறகு, நமது கைரேகையை அதில் பொருத்தப்பட்டுள்ள ஸ்கேனரில் பதிவு செய்தால் பணப் பரிமாற்றம் செய்ய நமக்கு அனுமதி அளிக்கும்.

- **வெளிநாட்டில் இருந்து அமெரிக்காவிற்கு வந்து படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடம் பிடிக்கிறது** என்று அமெரிக்க துணை தூதர் டஸ்தின் டாக்கிவிஸ் கூறிஉள்ளார். அமெரிக்காவில் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மொத்த வெளிநாட்டு

மாணவர்கள் சதவிதத்தில் 13 சதவிதம் பேர் இந்திய மாணவர்கள் ஆவர். அமெரிக்காவில் 1.32 லட்சம் இந்திய மாணவர்கள் படிக்கிறார்கள்.

- உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் 05-04-2016 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் இரண்டரை லட்சம் தொழில் முனைவோரை உருவாக்கும் **"ஸ்டாண்ட் அப் இந்தியா' திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.**

- **வங்கிகளுக்கு வழங்கும் குறுகியகாலக் கடன்களஉக்கான வட்டி விகிதத்தை 0.25 சதவீதமாக ரிசர்வ் வங்கி 05-04-2016 அன்று குறைத்தது**
    - ரிசர்வ் வங்கியிடமிருந்து குறுகியகால அடிப்படையில் வங்கிகள் பெறும் கடனுக்கான வட்டி விகிதம் (ரெபோ ரேட்) 0.25 சதவீதம் குறைக்கப்பட்டு 6.75 சதவீதத்திலிருந்து 6.50 சதவீதமாக குறைக்கப்படுகிறது.
    - பிற வங்கிகளிடமிருந்து ரிசர்வ் வங்கி பெறும் கடனுக்கான வட்டி விகிதம் (ரிவர்ஸ் ரெபோ ரேட்) 0.25 சதவீதம் உயர்த்தப்பட்டு 5.75 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக அதிகரிக்கப்படுகிறது. வங்கிகளின் ரொக்க கையிருப்பு விகிதம் 4 சதவீதம் என்ற அளவிலேயே நீடிக்கும்.

- பாஜக மூத்த தலைவர் எல்.கே.அத்வானியின் மனைவி **கமலா அத்வானி,** 06-04-2016 அன்று மரணமடைந்தார்.

- **முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மீண்டும் ஆசிரியர் பணிக்குத் திரும்புகிறார்** : கடந்த 1954-ல் சண்டி கரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்ற மன்மோகன் சிங், 1957-ல் அதே பல்கலைக்கழகத்தில் இளநிலை பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். சிறந்த பொருளாதார நிபுணராக விளங்கிய மன்மோகன் சிங், பின்னர் ஐ.நா. சபை பணி, ரிசர்வ் வங்கி ஆளுநர், நிதியமைச்சர் என படிப்படியாக உயர்ந்து 2004-ல் பிரதமராகப் பதவியேற்றார். 2014 வரை தொடர்ந்து 10 ஆண்டுகள் பிரதமராக இருந்த அவர், தற்போது மீண்டும் ஆசிரியர் பணிக்குத் திரும்ப உள்ளார். விரைவில் **சண்டிகரில் உள்ள**

**பஞ்சாப் பல்கலைக் கழகத்துக்கு** செல்லும் மன்மோகன் சிங், மாணவர் களுடன் கலந்துரையாட உள்ளார். பின்னர் டெல்லியில் இருந்தபடியே வீடியோ கான்பரன்சிங் மூலம் மாணவர்களுக்கு பாடம் நடத்தவுள்ளார்.

- **முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் அறிவுசார் மையம்** அவரது நினைவுநாளான ஜீலை 27 அன்று டெல்லியில் திறக்கப்படும் என டெல்லி மாநில அரசு தெரிவித்துள்ளது.

- **எழுக இந்தியா திட்டம்** : தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு ரூ.1 கோடி வரை தொழில் கடன் வழங்க வகை செய்யும் 'எழுக இந்தியா' (ஸ்டாண்ட் அப் இந்தியா) திட்டத்தை பிரதமர் **நரேந்திர மோடி டெல்லி அருகேயுள்ள நொய்டா வில் மறைந்த தலைவர் பாபு ஜெகஜீவன் ராம் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் தொடங்கி வைத்தார்.**

- **மகாராஷ்டிர மாநிலம், சிங்கணாப்பூரில் உள்ள சனி பகவான் கோயிலில் உள்ள புனித மேடையில் பெண்கள் ஏறுவதற்கு கோயில் நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.** இதையடுத்து புனித மேடையில் பெண்களை அனுமதிப்பதில்லை என்று கடந்த சில நூற்றாண்டுகளாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த பாரம்பரிய மரபுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

- **"சாகர்மாலா" துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அடுத்த 4, 5 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது** என்று மத்திய தரைவழிப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்.
  - இத்திட்டத்தின் படி, நாட்டில் உள்ள 7,500 கி.மீ. கடலோரப் பாதைகள், 14,500 கி.மீ. நீர்வழிப் பாதைகள், சர்வதேச கடல்சார் வர்த்தக வழிகள் ஆகியவற்றை மேம்படுத்தப்படும்.

- **'ஸ்வீப்' (SVEEP) திட்டம்** எனப்படுவது வரவிருக்கிற மாநில சட்டமன்ற தேர்தல்களில் (மேற்கு வங்கம், அஸ்ஸாம், தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி)



www.tnpscportal.in

அதிகளவு வாக்காளர்களை ஜனநாயகக் கடமையாற்றச் செய்ய வைக்க இந்திய தேர்தல் ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் முயற்சியாகும்.

- **பிரிட்டனில் உள்ள கோஹினூர் வைரத்தைத் திரும்பக் கொண்டு வர இயலாது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

  - **பிரிட்டனில் உள்ள கோஹினூர் வைரத்தை திரும்பப் பெறுவது** குறித்து, அரசின் நிலையை தெரிவிக்க வேண்டும் என, மத்திய அரசுக்கு, சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.
  - ஆந்திரா மாநிலத்தில் தோண்டி எடுக்கப்பட்ட கோஹினூர் வைரம். உலகிலேயே மிகப்பெரிய வைரம் என நம்பப்படுகிறது. இது, 105 கேரட் மதிப்பு கொண்டது. தற்போது, பிரிட்டன் வசம் உள்ளது.
  - தொல்லியல் மற்றும் கலைப் பொருள்கள் பாதுகாப்புச் சட்டம் 1972-இன்படி, சுதந்திரத்துக்கு முன்னர் கொண்டு செல்லப்பட்ட பொருள்களைத் திரும்பிக் கொண்டு வர இயலாது என காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - கோஹினூர் வைரம் கிழக்கிந்திய கம்பெனிக்கு கடந்த 1849ஆம் ஆண்டில் சீக்கிய மகாராஜா ரஞ்சித் சிங்கால் பரிசாக அளிக்கப்பட்டது என மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

- மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் - **ரஞ்சித் குமார்**

- 1 **லட்சம் கிராமங்களில் வை-ஃபை இணைய வசதி:பிஎஸ்என்எல் சோதனை முயற்சி** : கிராமப்புறங்களில் மத்திய அரசின் அகண்ட அலைவரிசை (பிராட்பேண்ட்) இணையதள வசதி அளிக்கும் திட்டம் தாமதமாவதால், அடுத்த ஓராண்டுக்குள் 1 லட்சம் கிராம ஊராட்சிகளில் வை-ஃபை இணையதள வசதி அளிப்பதற்கு பிஎஸ்என்எல் நிறுவனம் முயன்று வருகிறது. இதற்காக, ராஜஸ்தான் மாநிலம், அல்வர் மாவட்டத்தில் உள்ள 3 கிராமங்களில் சோதனை முறையில் வை-ஃபை இணைய வசதி அளிக்கப்பட்டுள்ளது.

www.tnpscportal.in

- **பிரிட்டன் இளவரசர் வில்லியமும், அவரது மனைவி கேத் மிடில்டனும் மும்பை நகருக்கு 10-04-016 அன்று வந்தனர்**. இருவரும் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும். அவர்கள் காஜிரங்கா தேசிய பூங்காவை சுற்றிப் பார்த்தனர். "இந்தியர்களின் புத்தாக்கத் திறனும், தொழில்நுட்ப அறிவும் இந்தியாவுக்கு மட்டுமின்றி உலகுக்கே பயன்படக்கூடியவை' என்று இளவரசர் வில்லியம் பாராட்டுத் தெரிவித்தார்.

- **உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள விதிமுறைகளை அரசு விளம்பரங்கள் மீறுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் வகையில் மூன்று நபர் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.**

  - மத்திய, மாநில அரசுகள் சார்பில் வெளியிடப்படும் விளம்பரங்களில் மத்திய அமைச்சர்கள், முதல்வர்கள், ஆளுநர்கள், மாநில அமைச்சர்கள் ஆகியோரின் புகைப்படங்களையும் பயன்படுத்தலாம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

  - தேர்தல் ஆணைய முன்னாள் தலைமை ஆணையர் **பி.பி.டாண்டன்** தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் "இந்தியா டிவி' தொலைக்காட்சியின் முதன்மை ஆசிரியர் **ரஜத் சர்மா**, "ஓகில்வி அண்ட் மேதர்' விளம்பர நிறுவனத்தின் தெற்காசியப் பிரிவின் செயல் தலைவர் **பியூஸ் பாண்டே** ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

- கேரள மாநிலம், சபரிமலை ஐயப்பன் கோயிலில் வயது வந்த பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து தொடுக்கப்பட்டுள்ள பொது நல வழக்கில், **அரசமைப்புச் சட்டத்தை விட பாரம்பரியம் உயர்ந்ததா? என்று உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.**

- **கேரள தீ விபத்து** : கேரள மாநிலம் கொல்லத்தை அடுத்த பரவூரில் புட்டிங்கல் அம்மன் கோவிலில் பங்குனி திருவிழா நடைபெற்றது. கோவில் விழாவின் இறுதி நாளான 10-4-16 அன்று அதிகாலை வாணவேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது வாணவேடிக்கையில் வெடித்த பட்டாசில் இருந்து சிதறிய தீப்பொறிகள் வெடிகள் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் விழுந்தது.

இதில் ஏற்பட்ட தீ விபத்தில் விழாவுக்கு வந்திருந்த 102 பக்தர்கள் பலியானார்கள்.

❖ **ஹரியானா மாநிலத்தின் "குர்கான்' நகரத்தின் பெயர் "குருகிராமம்' என மாற்றம் செய்யப்பட்டுள்ளது:** மகாபாரத இதிகாசத்தின் அடிப்படையில், "குர்கான்' நகரின் பெயரை "குருகிராமம்' ஆக மாற்ற ஹரியாணா மாநில அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்தது. மகாபாரத இதிகாசத்தில் குரு துரோனாச்சாரியார், தனது மாணவர்களுக்கு பாடம் கற்றுக்கொடுத்த இடம் என்பதால், குர்கான் நகரம் பழங்காலத்தில் "குருகிராமம்' என அழைக்கப்பட்டது. இந்தப் பெயரே நாளடைவில் "குர்கான்' என அழைக்கப்பட்டது. இந்த நிலையில் பாரம்பரியமாக அழைக்கப்பட்டு வந்த குருகிராமம் பெயரே குர்கானுக்கு வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

- இதேபோல ஜாட் முஸ்லிம்கள் எனப்படும் சமுதாயத்தினர் பெரும்பான்மையாக வசித்து வரும் "மேவாட்' மாவட்டத்தின் பெயரும் பழங்காலத்தில் **"நூஹ்'** என அழைக்கப்பட்டது. இந்த இரு நகரங்களின் பெயரும் மீண்டும் பழையபடியே மாற்றியமைக்கப்படுகிறது.

❖ **இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் 7.5 சதவீதமாக நீடிக்கும்** என்று சர்வதேச செலாவணி நிதியம் (ஐஎம்எ்ப்) மீண்டும் கணித்துள்ளது.கடந்த 2015ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீதமாக இருந்தது. அந்த அளவு, 2016, 2017 ஆகிய 2 ஆண்டுகளில் சற்று அதிகரித்து 7.5 சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் முன்பு கணித்திருந்தது.

❖ **'கொமகட்டா மேரு' சம்பவத்திற்காக 102 ஆண்டுகள் சென்ற பின் மன்னிப்பு கேட்ட கனடா பிரதமர்** : 1914ம் ஆண்டு ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்ட போது, கனடாவில் தஞ்சமடைய 'கொமகட்டா மேரு' என்ற கப்பலில் 376 இந்தியர்கள் சென்றனர். இதில் பெரும்பாலானோர் சீக்கியர்கள். ஆனால் கனடா அகதிகளை ஏற்க மறுத்து, அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியது. இதனையடுத்து கோல்கட்டா துறைமுகத்தில் இறங்கிய போது, ஆங்கிலேய படையினர் அவர்களை

நோக்கி சுட்டதில் 19 பேர் பலியாயினர். இந்நிலையத்தில் இச்சம்பவத்திற்காக பகிரங்க மன்னிப்பு கேட்க தயாராக இருப்பதாக கனடாவின் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் துருடோ அறிவித்துள்ளார்.

- **'த ஜங்கிள் புக்'** என்ற ஹாலிவுட் படத்தில் நடித்துள்ள இந்திய வம்சாவளி சிறுவன் - **நீல்சேத்தி** ('மோக்லி' என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்)

- **ஒடிசாவில் 'ஆஹார் (ஆகாரம்)' என்ற மதிய உணவு திட்டம் கடந்த ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி தொடங்கப்பட்டது.** இத்திட்டத்தின் கீழ் அரிசி சாதமும், 'தல்மா' எனப்படும் பருப்பு மற்றும் காய்கறிகள் சேர்த்து ரூ.5-க்கு அளிக் கப்படுகிறது. இத்துடன் சுத்தமான குடிநீரும் பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

- **இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள, பாகிஸ்தான் ஹிந்து அகதிகள்,** சொத்துக்கள் வாங்கவும், வங்கிக் கணக்குகள் துவங்கவும் அனுமதியளித்து, மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

- **சமையல் காஸ் சிலிண்டர்** வாங்கும் நுகர்வோருக்கு, அதனுடன், **ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பிலான, 'இன்சூரன்ஸ்'** திட்டம் இலவசமாக வழங்கப்படுகிறது.

- **சம்ஜௌதா விரைவு ரயில் குண்டுவெடிப்பு நடைபெற்ற ஆண்டு** - 2007 . இந்தியா-பாகிஸ்தான் இடையே இயக்கப்படும் சம்ஜௌதா விரைவு ரயிலில், கடந்த 2007ஆம் ஆண்டு குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. இதில் 68 பேர் பலியாகினர்; 12 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- ஏழுமலையானுக்கு கடந்த ஆண்டு பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்திய 1,311 கிலோ தங்கத்தை, **பஞ்சாப் நேஷனல் வங்கியில்** 1.75 சதவீத வட்டியில் 3 ஆண்டு காலத்துக்கு தேவஸ்தானம் வைத்துள்ளது.

- தெலங்கானா மாநில வரலாற்றை உலகுக்குத் தெரியப்படுத்த, **அமெரிக்காவில் உள்ள அமெரிக்க தெலங்கானா சங்கம்** (ஆட்டா) முடிவு செய்துள்ளது. அதற்காக ஜூலை 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை

டெட்ராய்டு நகரத்தில் முதல் உலக தெலங்கானா மகாசபையைக் கூட்ட அதன் நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர்.

- **உலகிலேயே மிகவும் அதிக வயதான நபர் என்னும் பெருமையை சுதந்திரப் போராட்ட வீரரும், நேதாஜியின் கார் ஓட்டுநருமான கர்னல் நிஜாமுதீன் படைத்துள்ளார்.** அவருக்கு தற்போது 116 வயதும், 3 மாதங்கள் மற்றும் 14 நாள்களும் ஆகின்றன.

- **வருங்கால வைப்பு நிதியில் (பிஎப்) உள்ள தொகையை வெளியில் எடுப்பதற்கு கட்டுப்பாடு விதிக்கும் புதிய அறிவிக்கையை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.** பிஎப் அமைப்பில் 5 கோடிக்கும் மேற்பட்ட சந்தாதாரர்கள் உள்ளனர். ஒவ்வொரு சந்தாதாரரின் அடிப் படை மாத சம்பளத்தில் 12 சதவீத தொகையை பிடித்தம் செய்யும் நிறுவனங்கள், அதே அளவு (12%) தொகையை தங்கள் பங்களிப்பாக சேர்த்து பிஎப் அமைப்பில் செலுத்து கின்றன.

- **இந்திய - மொளரிசியஸ்** நாடுகளுக்கிடையே, பாரம்பரிய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி மருத்துவங்களை மேம்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

- **'பேடி பச்சா பேடி பாடாஹோா திட்டம் '** Beti Bachao Beti Padhao (BBBP) - 22 ஜனவரி 2015 அன்று பிரதமர் மோடி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் **பெண் குழந்தைகளின்(** Child Sex Ratio) **எண்ணிக்கையை அதிகரிக்க** திட்டமிடப்பட்டுள்ளது.

- **இந்தியா-சீனா இடையிலான எல்லைப் பிரச்னையை தீர்ப்பதற்காக 19-ஆவது சுற்று பேச்சுவார்த்தை, சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் 21-4-2016 அன்று நடைபெற்றது.**இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், சீன பாதுகாப்பு ஆலோசகர் யாங் ஜிச்சி ஆகியோர் பங்கேற்றனர்.

- **இந்தியாவில் மக்கள்தொகையை அதிகரிக்க வேண்டும்** என்று சர்ச்சைக்குரிய வகையில் சமீபத்தில் பேசியவர் - **ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு.**

- உத்தரகாண்ட் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டிருந்த குடியரசுத் தலைவர் ஆட்சியை ரத்து செய்து அம்மாநில உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. **குடியரசுத் தலைவரின் முடிவும், நீதித் துறையின் மறுஆய்வுக்கு உட்படுத்தக்கூடியதுதான்** என்று உத்தரகண்ட் மாநில உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

- **மத்திய பிரதேச மாநிலம் உஜ்ஜைனியில் சிம்ஹஸ்த கும்ப மேளா**வையொட்டி பன்முக கலாசாரத்தை பிரதிபலிக்கும் சுற்றுலாத் திருவிழா ஏப்ரல் 22 தொடங்கி மே 21ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தியாவில் நடைபெறும் மிகப் பெரிய கும்ப மேளா திருவிழாக்களில் முக்கியமானதாக "சிம்ஹஸ்த கும்ப மேளா' கருதப்படுகிறது. **பன்னிரண்டு கோள்கள் நேர் கோட்டில் வருவதைக் குறிக்கும் வகையில் சிம்ஹஸ்த கும்ப மேளா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது**. இதையொட்டி, உஜ்ஜைனியில் உள்ள ஷிப்ரா நதியில் பக்தர்கள் புனித நீராடி இறை வழிபாடு செய்வதை முக்கியக் கடமையாகக் கருதுகின்றனர்.

- பாஜக மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி, மலையாள நடிகர் சுரேஷ் கோபி, குத்துச் சண்டை வீராங்கனை மேரி காம் உள்பட ஆறு பேரை நியமன உறுப்பினர்களாக மத்திய அரசு தேர்வு செய்து குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்துள்ளது.

- சக பெண் பணியாளருக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றச்சாட்டுக்கு உள்ளான **ஆர்.கே.பச்சௌரி**, ஆற்றல் மற்றும் வளங்கள் (தேரி) நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகினார்.

- **உலகின் செல்வாக்கு மிக்கவர் களின் பட்டியலை டைம் பத்திரிகை** வெளியிட்டுள்ளது. **இந்தப் பட்டி யலில் ஏழு இந்தியர்கள் உள்ளனர்**. ரிசர்வ் வங்கியின் கவர்னர் ரகுராம் ராஜன், டென்னிஸ் வீரர் சானியா மிர்சா, நடிகை பிரியங்கா சோப்ரா, கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை, சுற்றுச் சூழல் ஆர்வலர் சுனிதா நரைன் மற்றும் பிளிப்கார்ட் நிறுவனத்தின் சச்சின் பன்சால் மற்றும் பின்னி பன்சால் ஆகியோர் இடம் பிடித்திருக்கிறார்கள். இந்த பட்டியலில்

பிரதமர் மோடியும் பரிசீலனை செய்யப்பட்டார். ஆனால் முதல் 100 இடங்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கடந்த வருடம் இந்த பட்டியலில் மோடி இருந்தார்.

- நாடு முழுவதும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வசிக்கும் **5 கோடி ஏழைக் குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் ரூ.8,000 கோடி மதிப்பிலான திட்டத்தை** பிரதமர் நரேந்திர மோடி, வரும் 1-ஆம் தேதி **உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள பலியா நகரில்** தொடக்கி வைக்கிறார்.

- இந்தியாவில் செல்வாக்கு மிக்க 10 பிராண்டுகளின் பட்டியலை உலக ஆராய்ச்சி நிறுவனமான Ipsos ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது. இதில் முதல் 5 இடங்களுக்குள் எந்த ஒரு இந்திய பிராண்டும் இல்லை. **இந்த பட்டியலில் உலகின் மிகப்பெரும் இணைய தேடு பொறி நிறுவனமான கூகுள் முதலிடம் வகிக்கிறது.** இதைத்தொடர்ந்து அடுத்தடுத்த இடங்கள் முறையே, பேஸ்புக், ஜிமெயில், மைக்ரோசாப்ட், மற்றும் சாம்சங் ஆகிய வெளிநாட்டு பிராண்டுகள் இடம் பெற்றுள்ளன.

- ஏப்ரல் 23ல் ஆண்டுதோறும் **கோங்ஜோம் தினம் (Khongjom Day)** கொண்டாடப்படும் இந்திய மாநிலம் - **மணிப்பூர்** . 1891 ஆம் ஆண்டில் நடைபெற்ற கோங்க்ஜோம் போரின் நினைவாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

- **இந்திய -தாய்லாந்து நாடுகளின் கடற்படை கூட்டுப் பயிற்சி** (Indo-Thai Coordinated Patrol (CORPAT)) அந்தமான் கடற்பகுதியில் நடைபெற்றது.

- சீனாவின் கடும் எதிர்ப்பை தொடர்ந்து, **சர்வதேச உய்குர் கூட்ட மைப்புத் தலைவர் டோல்குன் இசாவுக்கு வழங்கப்பட்ட விசாவை மத்திய அரசு ரத்து செய்துள்ளது.** சீனாவில் உய்குர் முஸ்லிம் களுக்கும் ராணுவத்தினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், சீனாவுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட உய்குர் மக்களை டோல்குன் இசா தூண்டி விடுவதாக சீனா குற்றம்சாட்டி வருகிறது.

- **ஆந்திர மாநிலத்தின் தாற்காலிக தலைமைச் செயலகத்தை அமராவதியில்** ஆந்திர அரசு தொடங்கி உள்ளது.
- **பப்புவா நியூ கினியா, நியூஸிலாந்து** ஆகிய நாடுகளுக்கு ஆறு நாள் அரசு முறைப் பயணமாக குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஏப்ரல் 27 அன்று புறப்படுகிறார். இந்த இரு நாடுகளுக்கும் குடியரசுத் தலைவர் பயணம் செய்வது இதுவே முதல் முறையாகும்.
- **அருணாச்சல பிரதேச மாநிலத்தில் தலைநகர் இடாநகர் உட்பட முக்கிய பொது இடங்களில் இலவசமாக வை-ஃபை ஹாட்ஸ்பாட் இண்டர்நெட் வசதியை வழங்க அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.** பி.எஸ்.என்.எல் மற்றும் சில தனியார் தொலைதொடர்பு நிறுவனங்களுடன் இணைந்து இந்த இண்டர்நெட் வசதியை வழங்க உள்ளது. பிரதமர் மோடியின் கனவுத்திட்டமான டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் இந்த வசதி அறிமுகமாகிறது.
- பயங்கரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்க, **பஞ்சாப் மாநிலத்துக்குள்பட்ட இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லைப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள "லேசர் சுவர்கள்**' செயல்பாட்டுக்கு வந்துள்ளன
- நாட்டிலேயே மிக அதிகபட்சமாக **மேற்கு ஒடிஸாவின் சோனிப்பூரில்** 115.34 டிகிரி ஃபாரன்ஹீட் ( 46.3 டிகிரி செல்சியஸ்) வெப்பநிலை 28-4-2016 அன்று பதிவானது.
- இந்திய ஆயுள்காப்பீடு கட்டுப்பாட்டு ஆணையமும் UAE ஆயுள் காப்பீட்டு நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.
- காங்கிரஸ் அரசு கொண்டு வந்த ஏழைகளுக்கு வீடு கட்டி கொடுக்கும் மத்திய அரசு திட்டமான **"இந்திரா அவாஸ் யோஜனா" என்ற திட்டத்தின் பெயரை பிரதான மந்திரி "கிராமின் அவாஸ் யோஜனா "என்று மத்திய அரசு மாற்றியுள்ளது.**
    - **மாற்றி அமைக்கப்பட்டுள்ள இந்த திட்டத்தில் ஏழைகளுக்கு வீடு கட்ட சுமார் 1,20,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

- **இதற்கு முன்னர் இந்த திட்டத்தின் கீழ் 70,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிய திட்டத்தின் படி 70,000 ரூபாய் வரை கடன் உதவி பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
- **மேலும் வீடுகளில் கழிவறை கட்டுவதற்காக 12,000 ரூபாயும் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.**
- **"இந்திரா அவாஸ் யோஜனா" திட்டம் 1985 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் ராஜுவ் காந்தியால் அமல்படுத்தபட்டது குறிப்பிடத்தக்கது.**

❖ **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்** குறித்த ரகசிய ஆவணங்கள் அடங்கிய **3வது பகுதியை** மத்திய அரசு 29-4-2016 அன்று தில்லியில் வெளியிட்டது.தில்லியில் மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் மகேஷ் சர்மா வெளியிட்ட 3வது பகுதியில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பற்றிய 25 ஆவணங்கள் இடம்பெற்றுள்ளன. www.netajipapers.gov.in என்ற இணையதளப் பக்கத்தில் 50 ஆவணங்களை மத்திய அமைச்சர் மகேஷ் சர்மா மார்ச் மாதம் வெளியிட்டார். தற்போது மேலும் 25 ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

❖ **இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படையின் (ஐடிபிபி) வடகிழக்குப் பிராந்திய தலைமையகத்தை, மேகாலயத் தலைநகர் ஷில்லாங்கில் இருந்து அருணாசலப் பிரதேசத் தலைநகர் இட்டா நகருக்கு மாற்றத் தொடங்கியுள்ளது** மத்திய அரசு.அருணாசலப் பிரதேச எல்லைப் பகுதிக்குள் சீன ராணுவம் அடிக்கடி அத்துமீறலில் ஈடுபட்டு வருவதையடுத்து, மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

❖ இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படையின் (ஐடிபிபி) தற்போதைய இயக்குநர் - **கிருஷ்ணா சௌதரி**

❖ **ரயில்வே பாதுகாப்புப் படையின் (ஆர்பிஎஃப்) தலைவராக மூத்த ஐபிஎஸ் அதிகாரி எஸ்.கே.பகத் நியமிக்கப்பட்டார்.**

❖ பிரிட்டன் தலைநகர் லண்டனில் அமைந்துள்ள புகழ்பெற்ற **"மேடம் துஸாட்ஸ்' அருங்காட்சியகத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் மெழுகுச் சிலை** நிறுவப்பட்டுள்ளது.

- **பொதுப் பிரிவினரில் பொருளாதார ரீதியாக நலிவடைந்தோருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு அளிப்பதாக குஜராத் மாநில அரசு அறிவித்துள்ளது.** படேல் சமூகத்தினரின் இடஒதுக்கீடு போராட்டத்தால் கடும் நெருக்கடிக்கு உள்ளான நிலையில் குஜராத் மாநில பாஜக அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.6 லட்சத்துக்கு குறைவாக உள்ள பொதுப் பிரிவினர் இந்த 10 சதவீத இடஒதுக்கீட்டுச் சலுகையைப் பெற முடியும்.

- இந்தியாவின் ஆதார் அடையாள அட்டை திட்டத்துக்கு, உலக வங்கி பாராட்டு தெரிவித்துள்ளதாக, **இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமை இயக்குநர் அஜய் பூஷண் பாண்டே** தெரிவித்துள்ளார்.

- . ரயில் பயணிகள், தங்கள் பயணச் சீட்டுகளை ரத்து செய்வதற்கு "139' என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது

- மத்திய கப்பல் போக்குவரத்துத் துறையினால் நடத்தப்பட்ட , **இந்தியாவின் முதல் கடல்சார் கூடுகை 2016 மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் நடைபெற்றது.**

- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டியை, மத்திய அரசு, மீண்டும் 8.8 **சதவீதமாக உயர்த்தியுள்ளது.**

- **சமீபத்தில் காலமான புகழ்பெற்ற பத்திரிக்கையாளர் யோகேந்திர பாலி தொடர்புடைய நாழிதள் - டைம்ஸ் ஆஃப் இந்தியா**

- **நாடோடி யானை - 2016 (Nomadic Elephant -2016)** - எனப்படுவது, மங்கோலியாவில் நடைபெற்ற, **இந்திய-மங்கோலிய** இராணுவங்களுக்கிடையேயான கூட்டு இராணுவ ஒத்திகையாகும்.

- **ஆசிய அளவிலான புலிகள் பாதுகாப்பிற்கான மூன்றாவது அமைச்சரவை கூடுகை** புது தில்லியில் பிரதமர் மோடி அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது.

- சமீபத்தில் இந்திய கடற்படையிலிருந்து திரும்பப்பெறப்பட்ட இரு போர்க்கப்பல்கள் - **வீர்(Veer) மற்றும் நிபாத் (Nipat)**

- **'ஆசியாவின் இதயம்' எனப்படும் மாநாடு**, ஆப்கானிஸ்தானின் அமைதி மற்றும் நிலையான ஆட்சியை குறிக்கோளாகக்கொண்டு புது டில்லியில் நடைபெற்றது.

- **சத்ருஜீத் (Shatrujeet)** - எனப்படுவது தார் பாலைவனத்தில் நடத்தப்பட்ட இந்திய இராணுவத்தின் பிரமாண்டமான போர் ஒத்திகையாகும்.

- ஹரியானா மாநிலத்தில், **உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிட குறைந்த பட்ச கல்வி தகுதியை** நிர்ணயித்து அம்மாநில சட்டசபையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

- **மதுகர் குப்தா குழு (Madhukar Gupta Committee)** : இந்திய-பாகிஸ்தான் எல்லையில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக மத்திய உள்துறை அமைச்சகத்தினால் அமைக்கப்பட்ட குழு. இக்குழுவின் தலைவராக, முன்னாள் உள்துறை செயலர் மதுகர் குப்தா செயல்படுவார்.

- ஐக்கிய நாடுகளவையின் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தால் (UNIDO - United Nations Industrial Development Organization) வெளியிடப்பட்ட **2015 ஆம் ஆண்டிற்கான, உற்பத்தியில் சிறந்து விளங்கும் உலகின் முதல் பத்து நாடுகளின் பட்டியலில் இந்தியா ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளது.** முதல் ஐந்து இடங்களில் முறையே சீனா, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் தென் கொரியா நாடுகள் இடம்பெற்றுள்ளன.

- **கிராம் உதய் செ பாரத் உதய் அபியான் (Gram Uday Se Bharat Uday Abhiyan)** எனும் திட்டத்தை பிரதமர் மோடி அவர்கள் சமீபத்தில் துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் படி, கிராமங்களில் சுய ஆட்சியை பலப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

- **அசோக் தல்வாய் குழு (Ashok Dalwai Committee)** : விவசாயிகளின் வருமானத்தை 2022 ஆம் ஆண்டிற்குள் இருமடங்காக்குவதற்கான திட்டத்தை உருவாக்க அமைக்கப்பட்ட 8 பேர் கொண்ட குழு.

- இந்தியாவின் பழங்கால வானியலறிஞரான **ஆர்யபட்டாவின் மார்பளவு உருவச்சிலை, பாரிசிலுள்ள UNESCO வின் தலைமையகத்தில்** நிறுவப்பட்டுள்ளது.

- CBEC - Central Board of Excise and Customs

- **இறக்குமதியாகும் ஸ்டீல் பொருட்களின் மீது மத்திய அரசு 10 % காப்பு இறக்குமதி தீர்வையை (safeguard duty) விதித்துள்ளது.** இத்தீர்வை 2018 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருக்கும். காப்பு இறக்குமதி தீர்வையானது, வெளிநாட்டு இறக்குமதியால் உள்நாட்டுத் தயாரிப்புகளுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுக்க விதிக்கப்படும் தீர்வையாகும்.

- இந்திய கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலில், நாட்டின் சிறந்த பல்கலைக்கழக்மாக, பெங்களூரிலுள்ள **இந்திய அறிவியல் நிறுவனம் (Indian Institute of Sciences (IISc))** தெரிவு செய்யப்பட்டுள்ளது.

- சுதந்திரப்போராட்ட வீரரும், 1857 ஆண்டு முதல் சுதந்திரப்போரின் முக்கிய தளபதியாகவும் செயலாற்றிய **தாந்தியா தோபே வின் 200 வது பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் மத்திய் அரசு 200 ரூபாய் நாணயம் மற்றும் 10 ரூபாய் நாணயத்தையும் அவரின் பெயரில் வெளியிட்டுள்ளது.**

- **பேடி பச்சோ திட்டம் (Beti Bachao Scheme)** மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சரவையின் திட்டமாகும். இதன் மூலம் குழந்தைகள் பாலின விகிதம் குறைவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

- **தேசிய விவசாய மற்றும் கிராம மேம்பாட்டு வங்கி (National Bank for Agriculture and Rural Development (NABARD))** உணவு பாதுகாப்புத் தொடர்பாக **ஜெர்மன் நாட்டு அரசுடன் கூட்டு ஒப்பந்தம்** செய்துள்ளது.

- **உலக ஊடக சுதந்திரப் பட்டியலில் (2016) இந்தியா 133 வது இடத்திலுள்ளது.** முதலிடத்தில் பின்லாந்து நாடு உள்ளது.

- குஜராத் மாநில அரசு, **பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 10 % இட ஒதுக்கீட்டை** அறிவித்துள்ளது.ஆறு லட்சத்திற்கு குறைவான ஆண்டு வருமானமுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இந்த இட ஒதுக்கீட்டைப் பெற தகுதியுடையவர்களாவர்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **வியட்நாம் நாடாளுமன்றத்துக்கு முதல் பெண் சபாநாயகராக நூயென் தி கிம் நான்** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- **அமெரிக்க தலைநகர் வாஷிங்ட னில் நேற்று தொடங்கிய அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார்.** அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் புறக்கணித்துள்ளார்.

- **வியத்நாம் அதிபராக** அந்த நாட்டின் சர்ச்சைக்குரிய காவல்துறைத் தலைவரான **டிரான் டை குவாங் தேர்ந்தெடுக்கப்பட்டார்**.

- மியான்மர் ஆளுங்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி, அந்த நாட்டு அதிபர் ஹிடின் கியாவின் செய்தித் தொடர்பாளராகப் பொறுப்பேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- **உலகில் உற்பத்தித் துறையில் முன்னணியில்** உள்ள பத்து நாடுகளை ஐ.நா தொழில் மேம்பாட்டு கழகம் (யூஎன்ஐடிஓ) பட்டியலிட்டுள்ளது. **இந்த பட்டியலில் இந்தியாவுக்கு 6-வது இடம் கிடைத்துள்ளது**.
  - **கடந்த 2015-ம் ஆண்டு இந்தியாவின் உற்பத்தித் துறை மதிப்பு முந்தைய ஆண்டை விட 7.6 சதவீதம் உயர்ந்திருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.** அதேசமயம் சர்வதேச அளவிலான உற்பத்தித் துறையின் வளர்ச்சி 2015-ம் ஆண்டில் 2.8 சதவீதம் மட்டுமே இருந்ததாகவும், முக்கிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சி மந்தமாக இருப்பதுமே இதற்கு காரணம் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.
  - **இந்த பட்டியலில் முதல் இடத்தில் சீனா இருக்கிறது. அடுத்தடுத்த இடங்களில் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் கொரியா**

**ஆகிய நாடுகள் உள்ளன.** பத்தாவது இடத்தில் இந்தோனேஷியா இருக்கிறது.

- **சார்க் நாடுகளின் மூன்றாவது வேளாண் துறை அமைச்சர்கள் கூட்டம்** 7-4-16 அன்று **டாக்காவில் (பங்களாதேஷ்) நடைபெற்றது.**
- **ஐஸ்லாந்தில் புதிய பிரதமராக சிகுர்துர் இங்கி ஜோஹான்சன்** 7-4-16 **அன்று பதவியேற்றார்.** பனாமா ஆவணங்கள் வெளியானபோது, முந்தைய பிரதமர் சிக்மண்ட் டேவிட் ராஜிநாமா செய்தார்
  - **நேபாள உச்ச நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக சுசீலா கார்க்கி பதவியேற்கிறார்.** ஊழல், பெண்களின் உரிமை ஆகியவற்றில் கடுமையான நிலைப்பாடுகள் கொண்டவர் நீதிபதி சுசீலா கார்க்கி, நேபாளத்தின் முதல் பெண் தலைமையாவார்.
    - அந்நாட்டில் முதல் பெண் அதிபர் வித்யாதேவி பண்டாரி, நாடாளுமன்றத்தின் முதல் அவைத் தலைவர் ஓம்சாரி கார்த்தி மகர் ஆகியோருக்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக சுசீலா கார்க்கி திகழ்வார் என்பது குறிப்பிடத் தக்கது.
  - வட மத்திய ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள சாட் நாட்டுக்கான **அமெரிக்கத் தூதர் பதவிக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கீதா பாசி**யின் பெயரை அதிபர் ஒபாமா பரிந்துரைத்துள்ளார்.
  - **உலக சுற்றுச்சூழல் தினத்தில், பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் இந்தியா உட்பட** 175 **நாடுகள் கையெழுத் திட்டுள்ளன**. இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள் என ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.
  - **நாடு கடந்த திபெத் அரசின் பிரதமராக லாப்சாங் சாங்கே மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**நாடு கடந்த திபெத் அரசின் தலைவராக இருந்த தலாய்லாமா, கடந்த 2011-ஆம் ஆண்டில் அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து, நாடு கடந்த திபெத்

அரசின் பிரதமராக லாப்சாங் சாங்கே தேர்வு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

- **வெனிசூலாவில் கடும் மின்சாரத் தட்டுப்பாடு** நிலவுவதையடுத்து, அந்த நாட்டு அரசு அலுவலகங்களுக்கு வாரம் 5 நாள் கட்டாய விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.
- வியட்நாமின் முதல் பெண் சபாநாயகராக நியூயென் தி கிம் நான் (Nguyen Thi Kim Ngan) தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- டிரான் டாய் குவாங் (Dai Quang) வியட்நாமின் ஒன்பதாவது அதிபராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.
- கொசோவா நாட்டின் அதிபராக ஹாசிம் தாசி (Hashim Thaci ) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஐஸ்லாந்து நாட்டின் புதிய பிரதமராக சிகுர்தூர் இங்கி ஜோஹன்ஸன் (Sigurdur Ingi Johannsson) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- **தென் பசுபிக் பிரதேசத்திலுள்ள நாடான நவுரு குடியரசு(Republic of Nauru)** சர்வதேச நிதியம் (International Monetary Fund (IMF)) மற்றும் உலக வங்கியின் 189 வது உறுப்பினராக இணைந்துள்ளது.
- உலகிலேயே மலேரியா நோயை முற்றிலும் ஒழிக்கப்பட்ட பகுதியாக **ஐரோப்பா** அறிவிக்கப்பட்டுள்ளது.
- **சஹீன் (Shaheen) 5 அல்லது "கழுகு 5"** - எனப்படுவது, சீனா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஏப்ரல் 2016 ல் நடைபெற்ற விமானப்படை ஒத்திகை.
- **SAWEN** - South Asia Wildlife Enforcement Network
- **ஹிரோசிமா பிரகடனம் (Hiroshima Declaration)** - ஜப்பான் நாட்டின், ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற ஏழு நாடுகளின் குழு (Group of 7 (G-7)) வின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூடுகையில் வெளியிடப்பட்ட இப்பிரகடனம் அணு ஆயுதங்களற்ற உலகத்திற்கான அழைப்பை விடுத்துள்ளது. G-7 என்பது, கனடா, பிரான்சு, ஜெர்மனி,

www.tnpscportal.in

இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பாகும்.

- **சர்வதேச பூஜ்யத்திற்கான மாநாடு** (International Conference on Zero) யுனெஸ்கோவின் தலைமையிடமான பாரிஸில் நடைபெற்றது.

## முக்கிய நியமனங்கள்

- ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் ( CREDAI - The Confederation of Real Estate Developers' Association of India )தலைவராக **சுரேஸ் கிருஷ்ணா** தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- **இந்தியா உள்ளிட்ட 53 உறுப்பு நாடுகளைக் கொண்ட காமன்வெல்த் அமைப்பின் முதல் பெண் பொதுச் செயலராக, பெட்ரிசியா ஸ்காட்லாண்ட் பொறுப்பேற்றார்.** இவர், கருப்பினத்தைச் சேர்ந்த முதல் பெண் அரசு வழக்குரைஞர், பிரிட்டன் அரசின் முதல் பெண் தலைமை வழக்குரைஞர் என்ற பெருமையுடன், தற்போது காமன்வெல்த் அமைப்பின் முதல் பெண் பொதுச் செயலர் என்ற பெருமையும் பெற்றுள்ளார். 60 வயதாகும் பெட்ரிசியா ஸ்காட்லாண்ட், டோமினிக்காவில் பிறந்து பிரிட்டனில் வளர்ந்தவர்.
- மத்திய காவல் துறை ஆராய்ச்சி பிரிவின் இயக்குநராக ஐ.பி.எஸ் அதிகாரி **மேரான் சி போர்வன்கார் (Ms. Meeran C.Borwankar)** நியமிக்கபட்டுள்ளார்.
- **ஜம்மு-காஷ்மீர்** மாநிலத்துடனான நிதி விவகாரங்களை சிறப்பாகக் கையாளும் விதமாக நிதித்துறை செயலர் **ரத்தன் வாட்டாளை** சிறப்பு அதிகாரியாக மத்திய அரசு நியமித்துள்ளது.
- **இந்திரா காந்தி தேசிய கலைகள் மையத்தின்** அறக்கட்டளை உறுப்பினராக தமிழகத்தைச் சேர்ந்த மூத்த நடனக் கலைஞர் **பத்மா சுப்பிரமணியம்** நியமிக்கப்பட்டுள்ளார்.

www.tnpscportal.in

- **தேசிய நினைவுச் சின்னங்கள் ஆணையத்தின் புதிய தலைவராக**, பண்டைய இந்திய வரலாற்றுக் கல்வி நிலையத்தின் தலைவர் **டாக்டர் சுஷ்மிதா பாண்டே** நியமிக்கப்பட்டார்.
- டில்லியில் உள்ள, ஐ.ஜி.என்.சி.ஏ., எனும், **இந்திரா தேசிய கலை மைய புதிய தலைவராக** மூத்த பத்திரிகையாளர் **ராம் பஹதுார் ராய்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- **மத்திய போலீஸ் ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்திற்குத்** இயக்குநர் ஜெனரலாக ஐ.பி.எஸ் அதிகாரி **மீரன் சி போர்வாங்கர் (Ms. Meeran C. Borwankar)** நியமிக்கப்பட்டுள்ளார் .
- **தேசிய நினைவு சின்னங்கள் ஆணையத்தின் (National Monument Authority) தலைவராக சுஷ்மிதா பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார்**.
- இந்திய கிரிக்கெட் வாரியத்தின் (BCCI) முதல் தலைமை நிர்வாக அதிகாரியாக **ராகுல் ஜோக்ரி நியமிக்கப்பட்டுள்ளார்**.
- இரயில்வே பாதுகாப்பு படையின் (Railways Protection Force) இயக்குநர் ஜெனரலாக **ஐ.பி.எஸ் அதிகாரி சுரேந்தர் குமார் பகத்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் தலைவராக சிக்கிம் மாநில முன்னாள் தலைமை நீதிபதி **பிரமோத் கோக்லி ( Permod Kohli )** நியமிக்கப்பட்டுள்ளார்.
- NASSCOM அமைப்பின் தலைவராக **திரு.சி.பி.குரானி** நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் முதல் பெண் முதலமைச்சராக **மெகபூபா முஃப்தி சையீது** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- தேசிய கடல்சார் தினம் (National Maritime Day) - ஏப்ரல் 5

www.tnpscportal.in

- **உலக சுகாதார தினம் - ஏப்ரல் 7** (1948-ம் ஆண்டு ஏப்ரல் 7-ம் தேதி உலக சுகாதார மையம் (World Health Organaisation) தொடங்கப்பட்டதை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அந்த நாள், உலக சுகாதார தினமாக கொண்டாடப்படுகிறது.)
- **உலக ஹோமியோபதி மருத்துவ தினம் -** ஏப்ரல் 10
- **உலக சித்தர்கள் தினம்** - ஏப்ரல் 14
- **உலக பாரம்பரிய தினம் (World Heritage Day)** - ஏப்ரல் 18
- உலக புவி நாள் - **ஏப்ரல் 22**
- உலக புத்தக தினம் - **ஏப்ரல் 23**
- **உலக காப்புரிமை தினம் -** ஏப்ரல் 23
- **தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் -** ஏப்ரல் 24
- உலக மலேரியா தினம் - **ஏப்ரல் 25**
- **உலக அறிவுசார் சொத்துரிமை தினம்** - ஏப்ரல் 26

## விருதுகள்

- மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ள **ஒடிசா மாநில கவிஞர் ஹல்தார் நாக் என்பவருக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்துள்ளது.**
- **2016- ஆம் ஆண்டின் இந்திய அழகியாக அசாம் மாநிலம் கவுகாத்தியை சேர்ந்த பிரியதர்ஷனி சாட்டர்ஜி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.** 2016-ம் ஆண்டிற்கான மிஸ் வேர்ல்டு அழகிப் போட்டியில் கலந்து கொள்ள பிரியதர்ஷினி சாட்டர்ஜி தகுதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
- உலக அளவில் இருக்கும் ஆசிய சமூக மக்களின் சாதனைகளை கௌரவிப்பதற்காக வழங்கப்படும் **பிரிட்டனின் உயரிய நிறுவனர் விருது (ஃபவுண்டர்ஸ் அவார்ட்)**, மறைந்த **அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது.**

- **பிரபல இந்திய பொருளாதார நிபுணரான என்.கே.சிங்கிற்கு (75) ஜப்பான் நாட்டின் 2-வது மிக உயரிய தேசிய விருதான 'The Order of the Rising Sun, Gold and Silver Star' விருது வழங்கப்பட உள்ளது.**

- **சவுதி அரேபிய நாட்டின் உயரிய விருதான கிங் அப்துலாசிஸ் சாஷ்** (King Abdulaziz Sash) இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- பிரான்சு நாட்டின் உயரிய விருதான Officer of the Legion of Honour விருது **இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெ.ஜெ.சிங்** கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

- **சரஸ்வதி சம்மன் விருது 2015** : **'சிட் - சிடீ" (Chitt-Chete)** எனப்படும் சுய சரிதையை டோகிரி மொழியில் (Dogri language) எழுதிய **டோகிரி கவிஞர் பத்மா சச்தேவ்** என்பவருக்கு வழங்கப்பட்டது.

## அறிவியல் தொழில்நுட்பம்

- **LIGO** - Laser Interferometer Gravitational Wave Observatory.

- **அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய ஹெலிகாப்டர் அட்லாண்டர் 10.** 93 மீட்டர் நீளம் கொண்ட ஹெலிகாப்டர்தான் என்றாலும் பின்பக்க வால் காற்றாடி, மேலே உள்ள காற்றாடி என எதுவும் கிடையாது. ஹீலியம் வாயு நிரப்பப்பட்டு, காற்றில் மிதக்கும் வகையில் புதிய தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த ஹெலிகாப்டரின் எடை மிக குறைவாக இருக்கும்.

- **நிலநடுக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் வகையில் நவீன செயற்கோளை** விண்ணில் செலுத்த இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான **இஸ்ரோவும், அமெரிக்காவின் நாஸா** அமைப்பும் முடிவு செய்துள்ளன.

- வாட்ஸ் அப் செயலியின் நிறுவனர்கள் - **ஜன் கவும், பிரையன் ஆக்டன்**

- அணுஆயுதங்களை ஏந்திச் செல்லக்கூடிய திறன் உடைய, 3,500 கி.மீ., தொலைவில் இருக்கும் இலக்கை தாக்கக் கூடிய ஏவுகணையை, இந்தியா வெற்றிகரமாக ஏவியது. **மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நினைவாக, அவருடைய பெயரை குறிக்கும் வகையில், இந்த ஏவுகணைக்கு, 'கே - 4' எனப் பெயரிடப்பட்டுள்ளது.**

- **இதயத்துக்கு ரத்தத்தை செலுத்தும் புதிய கருவி கண்டுபிடிப்பு - இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதனை** : இதய மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு உதவும் வகை யில், இதயத்துக்கு ரத்தத்தைச் செலுத்தும் புதிய கருவியை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) விஞ்ஞா னிகள் கண்டுபிடித் துள்ளனர். இதயத்துக்கு ரத்தத்தை எடுத்து செல்லும் ரத்தக் குழாய்க்கு பதில் இந்த புதிய பம்ப் செயல்படும். இது இதய மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு பெரிதும் உதவும்.

- **ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். ஒரு பார்வை**:

- நேவிகேஷன் எனப்படும் திசையறிதல் பயன்பாட்டுக்காக ஐஆர்என்எஸ்எஸ் (Indian Regional navigational satellite system) எனப் படும் 7 செயற்கைக்கோள் களை இஸ்ரோ விண்ணில் செலுத்தியுள்ளது. ஐஆர்என்எ ஸ்எஸ் 1ஏ 2013, ஜூலை 1 அன்றும், ஐஆர்என்எஸ்எஸ் 1பி 2014 ஏப்ரல்-4 அன்றும், ஐஆர்என்எஸ்எஸ் 1சி 2014, அக்டோபர் 16-ம் தேதியும், ஐஆர்என்எஸ்எஸ் 1டி 2015, மார்ச் 28-ம் தேதியும், ஐஆர்என்எஸ்எஸ் 1இ கடந்த ஜனவரி 20-ம் தேதியும், ஐஆர்என்எஸ்எஸ் 1எஃப் கடந்த மார்ச் 10-ம் தேதியும் விண்ணில் செலுத்தப்பட்டன.
- இந்நிலையில், ஐஆர்என் எஸ்எஸ் வரிசையின் கடைசி செயற்கைக்கோளான ஐஆர்என் எஸ்எஸ் 1ஜி செயற்கைக்கோள் (1,425 கிலோ) பிஎஸ்எல்வி-சி33 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து 28-04-2016 அன்று வெற்றிகரமாக விண்ணில் ஏவப் பட்டது. இடங்காணல் தொழில் நுட்பத்துக்கு உதவக்கூடிய ஐஆர்என்எஸ்எஸ் வரிசை செயற்கைக்கோள்களிலேயே, ஐஆர்என்எஸ்எஸ் 1-ஜி இடங் காணல் மற்றும் திசையறிதல் சேவைகளை மேம்பட்ட அள வில் வழங்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

- ஜிபிஎஸ் எனப்படும் இடங் காணல் சேவைக்கு இந்தியா இது வரை அமெரிக்காவின் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தைத்தான் பயன் படுத்தி வந்தது. இந்த சூழலில், ஐஆர்என்எஸ்எஸ் வரிசை யில் 7 செயற்கைக்கோள்களை ஏவுவதற்கு இஸ்ரோ திட்டமிட்டது. இந்த செயற்கைக்கோள்களின் பயன்பாடு 2 வகைப்படும் ஒன்று நிலையான சேவை (Standard service) மற்றொன்று வரையறைபடுத்தப்பட்ட சேவை (Restricted service). இதில் நிலையான சேவையின் மூலம் பொதுமக்கள் அனை வரும் இடங்காணல் மற்றும் திசையறிதல் சேவைகளை பயன்படுத்தலாம். ராணுவம் பாதுகாப்பு உள்ளிட்டவற்றுக்காக அந்த துறையினர் பயன்படுத்தும் சேவையும் உள்ளது.
- ஐஆர்என்எஸ்எஸ் வரிசையில் கடைசி செயற்கைக்கோளான 1ஜி-யை வெற்றிகரமாக விண்ணில் ஏவியதன் மூலம், இந்தியா தனது இடங்காணல் மற்றும் திசையறிதல் தேவைகளை தானே பூர்த்தி செய்துகொள்வதற்கான வாய்ப்பு எதிர்காலத்தில் ஏற்படும். இடங்காணல் சேவைக் காக வரும் காலத்தில் அமெரிக்காவின் உதவியை நாட வேண்டியிருக்காது.
- ஐஆர்என்எஸ்எஸ்-1ஜி செயற் கைக்கோளின் சேவைகளை இந்தியாவை சுற்றி 1,500 சதுர கி.மீ. தொலைவுக்கு பயன்படுத்த முடியும். இதனால் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள நாடுகளும் பயனடையும்.
- அமெரிக்காவின் ஜி.பி.எஸ் ரஷ்யாவின் GLONASS, சீனா வின் BeiDou, ஐரோப்பாவில் GALILEO என சில இடங்களில் மட்டுமே இருந்த இந்த சேவை, ஐஆர்என்எஸ்எஸ்-1ஜியின் வெற்றியின் மூலம் நமக்கும் சொந்தமாகியுள்ளது.
- **கடல்சார் ஆராய்ச்சிக்கான 7 செயற்கைக்கோள்களை உள்ளடக்கிய இந்த திட்டத்துக்கு 'நாவிக்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.**'நாவிகேஷன்' என்ற ஆங்கில வார்த் தையின் சுருக்கமாக 'நாவிக்' என்பது இருந்தாலும், இந்தியில் 'நாவிக்' என்ற வார்த்தைக்கு 'படகோட்டி' அல்லது 'கடலோடி' என்ற பொருள் வரும். இந்த செயற்கைக்கோளை மீனவர்களுக்கும் கடல் பயணத் தையே வாழ்க்கையாகக் கொண்டவர்

www.tnpscportal.in

களுக்கும் அர்ப்பணிப்பதாக பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

- ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கணிசமாகக் குறைத்து நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் **ஆயுஷ்-82** எனும் மருந்தை மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக் கவுன்சில் (சிசிஆர்ஏஎஸ்) உருவாக்கியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்தது.
- **எல் நீனோ** - வெப்ப சலனம் ஏற்படும் நிலை
- **லா நீனா** - பலத்த மழையும், வெள்ளப் பெருக்கும் குளிர்சலனம் ஏற்படும் நிலை
- **LIGO - Laser Interferometer Gravitational-wave Observatory** . இந்தியாவில் லிகோ ஆய்வகத்தை அமைக்க அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- **டெங்கு நோய்க்கு எதிரான உலகிலேயே முதல் நாடுமுழுதுமான தடுப்பூசித் திட்டம் பிலிப்பைன்ஸ்** நாட்டில் துவங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தடுப்பூசித்திட்டத்தில், டெங்கு நோய்க்கெதிரான உலகின் முதல் தடுப்பூசியான டெங்வாக்சியா (Dengvaxia) பயன்படுத்தப்படுகிறது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் **உலகிலேயே மிகவும் மெல்லிய செயற்கை இழையான 'சிலிக்கா ஏரோஜெல்' (silica aerogel)அல்லது ' ஃபுளூ ஏர்' (blue air) எனும்** பொருளைக் கண்டு பிடித்துள்ளனர்.
- இந்தியா உள்ளிட்ட 175 நாடுகள் புவி வெப்பமயமாதலைத் தடுப்பதற்கான , வரலாற்று சிறப்பு மிக்க **'பாரீஸ் பருவநிலை உடன்பாட்டில்'** (Paris Climate Agreement) அமெரிக்காவின் நியூயார்க் நகரில் வைத்து கையழுத்திட்டுள்ளனர்.

www.tnpscportal.in

- **Kunpeng-1B** - என்பது சமீபத்தில் **சீனா**வினால் அனுப்பப்பட்ட செயற்கைக் கோள் ஆகும்.

## விளையாட்டுகள்

- டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் 2-ஆவது அரையிறுதியில் 7விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா மேற்கிந்தியத் தீவுகளிடம் தோல்வியுற்றது. இதன் மூலம் இந்தியாவின் கோப்பை கனவை கலைந்தது.

- **சர்வதேச ஸ்குவாஷ் தரவரிசை**யில் இந்திய வீரர் சௌரவ் கோஷல் ஓர் இடம் முன்னேறி 18-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்திய வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா 14-ஆவது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டார். தீபிகா பலிக்கல் ஓர் இடத்தை இழந்து 19-ஆவது இடத்தில் இருக்கிறார். சசிகா இங்கேல் 81-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

- ஒலிம்பிக் போட்டிக்கான ஆசிய **குத்துச்சண்டை** தகுதிச்சுற்றில் இந்தியாவின் **சிவ தாபா வெள்ளிப் பதக்கம்** வென்றார்.

- **மகளிர் டி-20 உலகக்கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில்** ஆஸ்திரேலிய அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் **மேற்கிந்திய தீவுகள் அணி வென்று சாம்பியன் பட்டத்தை பெற்றுள்ளது.**

- டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி மேற்கிந்தியத் தீவுகள் சாம்பியன் ஆனது. இதன்மூலம் டி20 உலகக் கோப்பையை இரு முறை கைப்பற்றிய முதல் அணி என்ற வரலாறை படைத்தது.

- டி20 உலகக்கோப்பையின் தொடர் நாயகன் விருதுக்கு இந்தியாவின் விராட் கோலி தேர்வாகியுள்ளார்.

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐசிசி) டி20 கனவு அணியின் கேப்டனாக இந்திய வீரர் **விராட் கோலி** தேர்வு செய்யப்பட்டுள்ளார்

❖ இந்திய ஓபன் சூப்பர் சீரிஸ் பாட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் தாய்லாந்தின் **ரட்சனோக் இந்தனன்** சாம்பியன் பட்டம் வென்றார்.

❖ பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

❖ **உலகக் கோப்பையை வெல்லும் வாய்ப்பை இழந்தபோதும் டி20 தரவரிசையில் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது இந்தியா**.

➢ இந்திய அணி 126 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறது. உலகக் கோப்பையை வென்ற மேற்கிந்தியத் தீவுகள் 125 புள்ளிகளுடன் 2-ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது. அரையிறுதி வரை முன்னேறிய நியூஸிலாந்து 3-ஆவது இடத்தையும், இறுதி ஆட்டத்தில் தோற்ற இங்கிலாந்து 4-ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

➢ பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் இந்திய வீரர் விராட் கோலி முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டார். ஆஸ்திரேலியாவின் ஆரோன் ஃபிஞ்ச் 2-ஆவது இடத்திலும், நியூஸிலாந்தின் மார்ட்டின் கப்டில் 3-ஆவது இடத்திலும் உள்ளனர்.

➢ பௌலர்கள் தரவரிசையைப் பொறுத்தவரையில் மேற்கிந்தியத் தீவுகளின் சாமுவேல் பத்ரீ முதலிடத்திலும், தென் ஆப்பிரிக்காவின் இம்ரான் தாஹிர், இந்தியாவின் அஸ்வின் ஆகியோர் முறையே 2 மற்றும் 3-ஆவது இடங்களிலும் உள்ளனர்.

❖ அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்ற **மியாமி மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஜப்பானின் நிஷிகோரியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.** இது அவர் வென்ற 28-ஆவது ஏடிபி மாஸ்டர்ஸ் பட்டமாகும். இதன்மூலம் ஏடிபி மாஸ்டர்ஸ் போட்டியில் அதிக முறை சாம்பியன் பட்டம் வென்றவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இவருக்கு அடுத்தபடியாக ஸ்பெயினின் ரஃபேல் நடால், 27 பட்டங்களுடன் 2-ஆவது இடத்தில் உள்ளார்.

- பாகிஸ்தான் அணியின் விக்கெட் கீப்பரும், பேட்ஸ்மேனுமான **சர்ஃப்ராஸ் அகமது**, அந்நாட்டு **டி20 அணியின் புதிய கேப்டனாக** அறிவிக்கப்பட்டுள்ளார்.

- **9-ஆவது ஐபிஎல் கிரிக்கெட் போட்டி மும்பையில் 9-4-16 அன்று தொடங்கியது.**

**<u>இதுவரை ஐபிஎல் கிரிக்கெட் சாம்பியன்கள்</u>**

2008 ராஜஸ்தான்

2009 டெக்கன் சார்ஜர்ஸ்

2010 சென்னை

2011 சென்னை

2012 கொல்கத்தா

2013 மும்பை

2014 கொல்கத்தா

2015 மும்பை

- **மலேசியாவின் ஷா ஆலம் நகரில் நடைபெற்ற மலேசிய ஓபன் சூப்பர் சீரிஸ் பாட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் மலேசியாவின் லீ சாங் வெய் சாம்பியன் பட்டம் வென்றார்.** மலேசிய ஓபனில் அவர் வென்ற 11-ஆவது பட்டம் இதுவாகும்.

- **சூதாட்டத்தில் ஈடுபட்டதன் எதிரொலியாக ஜப்பான் பாட்மிண்டன் வீரர் கென்டா மொமோட்டா காலவரையறையின்றி சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்**. ரியோ ஒலிம்பிக் போட்டிக்கான ஜப்பான் அணியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

- இந்தியாவின் முன்னணி பைக் வீராங்கனையான ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரைச் சேர்ந்த **வீனு பாலிவால்**, மத்தியப் பிரதேச மாநிலத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

- சாம்பியன்ஸ் டிராபிக்கு பதிலாக, வரும் 2019ஆம் ஆண்டு முதல் **"உலகளாவிய ஹாக்கி லீக்' (ஜிஹெச்எல்)** போட்டியை சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு அறிமுகப்படுத்த உள்ளது.

- **25-ஆவது அஸ்லான் ஷா கோப்பை ஹாக்கிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 4-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தி சாம்பியன் ஆனது**. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 9-ஆவது முறையாக கோப்பையை வென்று வரலாறு படைத்துள்ளது.

- **சிங்கப்பூர் ஓபன் சூப்பர்** சீரிஸ் பாட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **இந்தோனேசியாவின் சோனி டுவி குன்கோராவும்**, மகளிர் ஒற்றையர் பிரிவில் **தாய்லாந்தின் ரட்சனோக் இந்தனனும்** சாம்பியன் பட்டம் வென்றனர்.

- 2016ஆம் ஆண்டுக்கான **"உலகின் சிறந்த விளையாட்டு வீரர்"** விருதை **செர்பிய டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச்சும்**, **"சிறந்த வீராங்கனை'** விருதை அமெரிக்க **டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸýம்** தட்டிச் சென்றுள்ளனர்.

- ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இந்திய ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை **தீபா கர்மாகர்** தகுதி பெற்றுள்ளார்.

- **தமிழகத்தைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளரான எம். அஸ்வின்**, ஐபிஎல் போட்டியில் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரர்களின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.

- பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் வரும் ஆகஸ்டு 2016ல் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய அணியின் நல்லெண்ணத் தூதராக ஹிந்தி **நடிகர் சல்மான் கான்** நியமிக்கப்பட்டுள்ளார்.

- உலக துப்பாக்கிசுடுதல் போட்டி ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான ஸ்கீட் பிரிவில் **இந்தியாவின் மைராஜ் அகமது கான் வெள்ளிப் பதக்கம் வென்றார்.**

- மங்கோலிய தலைநகர் உலன்பாதரில் நடைபெற்று வரும் உலக ஒலிம்பிக் தகுதிச்சுற்றின் மூலம் ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார் இந்திய **மல்யுத்த வீரர் சந்தீப் தோமர்**.

- **ஐ.சி.சி T-20 உலகக் கோப்பை** ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் கல்கத்தாவில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், **ஸ்டீஃபானி டெயிலர் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றுள்ளது**.

நன்றி !

படியுங்கள் ! பகிருங்கள் ! வெற்றி பெறுங்கள் !

உங்கள் முயற்சிகளில் வெற்றிபெற வாழ்த்துக்கள் !

www.tnpscportal.in

கருத்துக்கள் / ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ளவும் :

mail@tnpscportal.in

www.tnpscportal.in